[1979 ஏப்ரல் 2]

நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை.

*வினா எண் 596—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை ஒன்று (Industrial Estate) அமைப்பது அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது பற்றி செயற்குறிப்பு உள்ளது. தொழிற்பேட்டை அமைப்பதற்கு தேவைப்படும் நிலத்தை தேர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

[முற்பகல் 9-20]

திரு. என். பழனிவேல் : நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தத் தொழிற்பேட்டை எந்த ஊர்களில் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலமாக அங்கங்கு கிடைக்கின்ற மூலப்பொருட்களை வைத்து, ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு மூலதனத்தை வைத்து நடத்துகின்ற தொழிற்சாலைகளை துவக்குவதற்கான அளவில் எங்கெங்கு கட்டிடங்களை கட்டிக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசித்து கட்டிடங்களை கட்டுவதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்ற அளவில் என்னென்ன தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை கிடைத்த வுடன் மாவட்டத்தில் இரண்டு மூன்று இடங்களில் இப்படிப் பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.